செ.வெ.எண்: 505/2016 நாள்: 08.08.2016

## பத்திரிக்கைச் செய்தி

கன்னியாக்குமரி மாவட்டம் கோட்டாரில் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி,மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. **"ஆயுர்வேதம்"** ஒரு மருத்துவம் என்பதை விட **"ஒரு வாழ்க்கை தத்துவம்"** என்று கூறினால் மிகையாகாது. ஆயுர்வேத மருத்துவ முறை இந்திய மருத்துவ முறைகளில் சிறந்த மருத்துவ முறையாகும். ஆயுர்வேத மருத்துவத்தின் மிக முக்கியமான நோக்கம் **"நோய் வராமல் தடுப்பது மற்றம் வந்த நோய் குணப்படுத்தப்பட்டு மீண்டும் வராமல் தடுப்பதுமாகும்"**. ஆயுர்வேத மருத்துவம் உலகின் பல்வேறு நாடுகளிலும் அங்கிகரிக்கப்பட்ட ஒரே இந்தியமுறை மருத்துவம் ஆகும். தற்போது உலக சுகாதார மையமும் **(WHO)** ஆயுர்வேத மருத்துவமுறையை ஒரு சிறந்த மருத்துவமாக அங்கிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புமிக்க ஆயுர்வேத மருத்துவத்திற்கு தமிழகத்தின் ஒரே அரசு கல்லூரி நமது குமரி மாவட்டத்தின், நாகர்கோவில் நகரின் மையப்பகுதியில் தமிழக அரசால் துவங்கப்பட்டிருப்பது நமது மாவட்டத்திற்கு பெருமை.

அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி தமிழக அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறையின் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையின் கீழ் செயல்படுகிறது. இக்கல்லூரி மத்திய அரசின் AYUSH துறை, CCIM மற்றும் தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்று செயல்படுகிறது.

இம்மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை 2007-ம் ஆண்டு முதல் கோட்டாரில் 7 ஆயுர்வேத சிறப்பு வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் 100 படுக்கை வசதிக் கொண்ட உள்நோயாளிகள் பிரிவுடனும் சிறப்பாக செயல்படுகிறது.

அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் அனைத்து ஆயுர்வேத மருந்துகள், சிகிச்சைகள் குறிப்பாக **"பஞ்சகர்மா"** சிகிச்சைகள் தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படுகின்றது. இரத்த பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படுகின்றது.

உள்நோயாளிகள் பிரிவில் உணவு மற்றும் அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றது. அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் இயங்கும் ஆயுர்வேத வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் அவற்றில் சிகிச்சையளிக்கப்படும் நோய் விபரம் கீழ்க்கண்டவாறு.

1. **காய சிகிச்சை மற்றும் பஞ்சகர்மா பிரிவு (பொது மருத்துவம்) :** பக்கவாதம், முடக்குவாதம், மூட்டுவலி, இடுப்புவலி, கழுத்துவலி, வயிற்றுப்புண், காய்சல், சளி, இருமல், சுவாசக்கோளாறு, தூக்கமின்மை, உடல் வீக்கம், சொரியாசிஸ், தோல் வியாதிகள், மஞ்சள் காமாலை, கொலஸ்ட்ரால், தைராய்டு கோளாறுகள் போன்ற நோய்களுக்கு இப்பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

2. **சல்யதந்திரா பிரிவு (ஆயுர்வேத அறுவை சிகிட்சை பிரிவு):** எலும்பு முறிவு, மூலம், பௌத்திரம், நாள்பட்ட புண்கள், கால் ஆணி, மருகள் அடிபட்ட காயங்கள், சிறுநீரக கல், பித்தப்பைகல் போன்ற நோய்களுக்கு அறுவை சிகிட்சை பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

3. **சாலக்யதந்திரா பிரிவு (கண், காது, மூக்கு, தொண்டை சிறப்பு பிரிவு):** பார்வை கோளாறு, ஒற்றை தலைவலி, காது வலி, காது கேளாமை, சைனசைட்டீஸ், இளநரை, பொடுகு, முடி கொட்டுதல், தொண்டை வலி, மூக்கில் சதை வளருதல் போன்ற நோய்களுக்கு இப்பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

4. **பாலரோக பிரிவு (குழந்தைகள் நலப்பிரிவு):** பெருமூளை வாதம் (Cerebral palsy), ஆட்டிசம், குழந்தைகளுக்கு வரும் சளி, இருமல், காய்ச்சல், தோல் வியாதி, தசை நார் வியாதிகள் போன்ற நோய்களுக்கு இப்பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

5. **பிரசூதி தந்த்ரா மற்றும் ஸ்திரிரோக பிரிவு (பெண்கள் நலப்பிரிவு):** வெள்ளைப்படுதல், மார்பக வியாதிகள், கருமுட்டை வியாதிகள், குழந்தையின்மை, மாதவிடாய் சம்பந்தப்பட்ட நோய்கள், மாதவிடாய் நிறுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், கருப்பை வியாதிகளுக்கு இப்பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

6. **ஸ்வஸ்த விருத்த பிரிவு (நோய் தடுப்பு பிரிவு):** எவ்வாறு நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்ற அறிவுரையும், யோகா ஆசனங்கள் மற்றும் உணவு வகைகள் குறித்த அறிவுரையும் வழங்கப்படுகின்றன. மேலும் உடல் பருமன், இரத்த சோகை, பலகீனம், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் இப்பிரிவின் கீழ் சிகிட்சை அளிக்கப்படுகின்றது.

**சிறப்பு வெளிநோயாளி சிகிச்சை பிரிவுகள்:**

| | |
|---|---|
| • திங்கள், புதன், வெள்ளி | மூலம், பௌத்தரம் |
| • செவ்வாய், வியாழன், சனி | எலும்பு முறிவு, மூட்டு விலகுதல், மற்றும் எலும்பு நோய்கள் |
| • வெள்ளிக்கிழமை | வெள்ளைப்படுதல்,மாதவிடாய் (பெண்களுக்கு) |

போன்ற சிறப்பு சிகிட்சை பிரிவுகள் செயல்படும்.

மேலும் ஆயுர்வேத சிகிட்சை முறைகளாகிய எண்ணெய் மசாஜ், இலைகிழி, பொடிகிழி, நவரை கிழி, சிரோதாரா, நசியம், பிழிச்சில், வஸ்தி போன்ற சிகிச்சைகளும் தேவைக்கேற்ப மருத்துவர்களின் ஆலோசனையுடன் வழங்கப்படும். பொதுமக்கள் தமிழக அரசால் வழங்கப்படும் இந்த சிகிச்சை முறைகளை நன்கு பயன்படுத்தி நோயற்ற ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க உதவுமாறு கன்னியாக்குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**